FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை

(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8120339

1. District : Namakkal PS: VAC Year: 2026 FIR No.: 01/AC/2026 Date:
மாவட்டம் காவல்நிலையம் ஆண்டு மு.த.அ. எண் நாள் 06.01.2026

2. (i) Act சட்டம்: The Prevention of Corruption (Amendment) Act, 2018 Sections பிரிவுகள்: 7(a)
(ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : Date from : Date to : 1) 31.12.2025 at about 1600 hrs
குற்ற நிகழ்வு நாள் நாள் முதல் நாள் வரை 2) 01.01.2026 at about 1115 hrs and 1215 hrs
Time Period : Time from : Time to : 3) 02.01.2026 at about 1230 hrs
நேர அளவு நேரம் முதல் நேரம் வரை 4) 05.01.2026 at about 1400 hrs over cellphone
(b) Information Received at PS. Date : Time :
காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 06.01.2026 நேரம் 0725 hrs
(c) General Diary Reference : Entry No(s) Time :
பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Vol-I நேரம் 08.10 hrs

4. Type of Information : Written/ Oral :
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக Computer typed

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: About 35 kms North west
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்
Beat Number : — (b) Address : Tiruchengode to P.Velur Road, CHB Colony
முறைக் காவல் எண் முகவரி
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : — District : —
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : K. Senthil Kumar (b) Father's/ Husband's Name : Kalimuthu
குற்றமுறையிட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் தந்தை / கணவர் பெயர்
(c) Date / Year of Birth : (d) Nationality : (e) Passport No. : —
நாள் / பிறந்த ஆண்டு Age-44 நாட்டினம் Indian வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : Place of Issue :
வழங்கப்பட்ட நாள் — வழங்கப்பட்ட இடம் —
(f) Occupation : Rig Vehicle (g) Address : No. 1/47, Thundukadu, Sidhalanthur P.O
தொழில் Agriculture முகவரி Pudhu Puliyampatti Village, Tiruchengode T.k Namakkal Dt.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
1) Tr. Gunasekaran, VAO, Pudhupuliyampatti Village.
2) Tmt. Devi, Village Assistant, Pudhupuliyampatti Village.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையிட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
Delay by the complainant.

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved : —
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any: —
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Submitted,

Separate sheets enclosed

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு
K. Senthilkumar 06-01-2026

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்
06/01/26

15. Date & Time of despatch to the court: 06.01.2026 0900hrs
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் S. PRABHU
Rank: நிலை .....No. எண் .....
Inspector of Police, VSAC, Namakkal.

நாமக்கல் மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண். 01/AC/2026, u/s 7(a) of the Prevention of Corruption (Amendment) Act, 2018-ன்படி பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கையின் வரிசை எண்.12-ன் தொடர்ச்சி...,

இன்று 06.01.2026-ஆம் தேதி செவ்வாய்க்கிழமை காலை 07.25 மணிக்கு நாமக்கல் ஊழல்தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளராகிய நான் அலுவலகத்தில் பணியில் இருந்த போது, வழக்கின் புகார்தாரர் திரு.K.செந்தில்குமார், த/பெ.காளிமுத்து, கதவு எண்.1/47 துண்டுக்காடு, சித்தாளந்தூர், புதுபுளியம்பட்டி கிராமம், திருச்செங்கோடு தாலுக்கா, நாமக்கல் மாவட்டம் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த, கணினியில் தட்டச்சு செய்யப்பட்ட புகாரின் விபரம் பின்வருமாறு:- அனுப்புநர் K. செந்தில்குமார், த/பெ. காளிமுத்து, கதவு எண்.1/47 துண்டுக்காடு, சித்தாளந்தூர், புதுபுளியம்பட்டி கிராமம், திருச்செங்கோடு தாலுக்கா, நாமக்கல் மாவட்டம். பெறுநர் உயர்திரு. காவல் ஆய்வாளர் அவர்கள், ஊழல்தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, நாமக்கல் மாவட்டம். ஐயா, நான் புதுபுளியம்பட்டி கிராமம் துண்டுக்காட்டில் எனது குடும்பத்துடன் குடியிருக்கிறேன். நான் 12-ஆம் வகுப்பு வரை படித்துவிட்டு ரிக் லாரி வைத்து தொழில் செய்கிறேன். அத்துடன் எனது அப்பா வழி பூர்வீக சொத்தான சுமார் 15 ஏக்கர் புஞ்சை நிலத்தில் விவசாயமும் செய்து வருகிறேன். புதுபுளியம்பட்டி கிராம சர்வே எண்.158/1-ல் உள்ள எங்களுக்கு சொந்தமான சுமார் 3 ஏக்கர் விவசாய நிலத்தில் நிறைய பனைமரங்கள் இருக்கின்றன. சில பனைமரங்கள் அதிக வயதாகி விட்டதால், அதில் காய்ந்து போன 6 பனைமரங்களை நான் எனக்கு தெரிந்த நபர் மூலம் விறகு எரிப்பதற்காக அறுத்து எடுக்கச் சொன்னேன். அதனால் அவர் ஆட்களை கூட்டி வந்து காய்ந்து போன 6 பனைமரங்களையும் போன வாரம் செவ்வாய்க்கிழமை 30.12.2025-ம் தேதி அன்று வெட்டி எடுத்து சென்றுவிட்டார். மறுநாள் புதன்கிழமை 31.12.2025-ம் தேதி காலை சுமார் 10 மணியளவில் புதுபுளியம்பட்டி VAO ஆபீசில் உதவியாளராக வேலை செய்யும் திருமதி.தேவி என்பவர் எங்கள் நிலத்திற்கு வந்து பனைமரங்கள் வெட்டப்பட்ட இடத்தை பார்த்துவிட்டு, அவரது செல்போன் எண்.8838163345-லிருந்து எனது செல்போன் எண்.9049575666-க்கு போன் செய்து பனைமரங்களை வெட்டுவதற்கு அரசு அனுமதி பெறவேண்டும் என்று உத்தரவு இருக்கிறது என்றும், நீங்கள் அனுமதி வாங்காமல் பனைமரத்தை வெட்டிவிட்டதாக புகார் வந்துள்ளது என்றும், அதனால் இது சம்பந்தமாக புதுபுளியம்பட்டி VAO-வை

பார்க்குமாறும் சொன்னார். அதனால் நான் அன்று மாலை சுமார் 3½ மணி அளவில் தேவி அவர்களுக்கு போன் செய்து புதுபுளியம்பட்டி VAO ஆபீசிற்கு வரட்டுமா என்று கேட்டேன். அதற்கு தேவி என்னை திருச்செங்கோடு வேலூர் ரோட்டில் உள்ள விஷ்ணு ஜெராக்ஸ் கடைக்கு வரச்சொன்னார். அதன்படி நான் அங்கு சென்றுபார்த்தபோது அங்கு அவர்கள் இல்லாததால் மீண்டும் போன் செய்து கேட்டபோது, தேவி என்னை திருச்செங்கோடு அவ்வை கே.எஸ்.ஆர். பள்ளிக்கு முன்பாக வரும்படி சொன்னார். நானும் அங்கே மாலை சுமார் 4 மணியளவில் சென்று அங்கிருந்த புதுபுளியம்பட்டி கிராம VAO குணசேகரன் அவர்களை பார்த்தேன். அங்கே VAO உடன் கிராம உதவியாளர் தேவியும் இருந்தார். அப்போது VAO குணசேகரன் என்னிடம் 6 பனைமரங்களை வெட்டியதற்கு RDO-வுக்கு ரிப்போர்ட் போடாமல் அப்படியே முடிக்க தனக்கும் தனது மேல் அதிகாரிகளுக்கும் தன்னிடம் தனியாக ஒரு ஐம்பதாயிரம் ரூபாய் கொடுத்தால் ரிப்போர்ட் அனுப்பாமலும், பைன் இல்லாமலும் இந்தப்பிரச்சனையை முடித்துவிடலாம் என்றும், எதற்கும் தான் RDO விடம் பேசிவிட்டு, உதவியாளர் தேவியிடம் சொல்லி அனுப்புவதாகவும், அவரிடமே தான் சொல்லி அனுப்பும் பணத்தை கொடுத்து விடுங்கள் என்றும் சொன்னார். நான் அதற்கு பைன் போட்டாலும் கட்டிடலாம் என்றும், எவ்வளவு பைன் வரும் என்றும் கேட்டேன். அதற்கு VAO அதெல்லாம் வேண்டாம், அதனால் யாருக்கும் பிரயோஜனம் இல்லை, நாங்களும் ரெக்கார்டை தூக்கிகிட்டு அலையணும், அதனால் பணத்தை மட்டும் கொடுத்துருங்க, அப்படியே முடிச்சிடலாம் என்று சொன்னார். அதனால் நான் வீட்டிற்கு கிளம்பி வந்துவிட்டேன். அடுத்தநாள் 01.01.2026-ம் தேதி காலை சுமார் 9½ மணியளவில் கிராம உதவியாளர் தேவி அவரது செல்போன் எண் 8838163345-ல் இருந்து எனது செல்போன் எண்.9842779257-க்கு போன் செய்துள்ளார். நான் அப்போது போனை கவனிக்கவில்லை, காலை சுமார் 10¾ மணியளவில் எனது செல்போனை பார்த்தபோது அதிலிருந்த மிஸ்டுகாலை பார்த்துவிட்டு அதே நம்பருக்கு நான் போன் போட்டு பேசியபோது கிராம உதவியாளர் தேவி என்னிடம், திருச்செங்கோடு CHB காலனியில் இருக்கும் அவருடைய வீட்டுக்குப்பக்கத்தில் உள்ள சின்ன பத்ரகாளியம்மன் கோவில் அருகில் வருமாறு சொன்னார். நானும் அவர் சொல்லியபடி அந்த இடத்துக்குப்போய் காலை சுமார் 11¼ மணியளவில் தேவியை பார்த்தபோது, நான் பனைமரம் வெட்டியதற்கு ரிப்போர்ட் போடாமல், பைன் இல்லாமல் முடிப்பதற்கு VAO குணசேகரன், பணம் ரூ.40,000/- கொடுக்க வேண்டும் என்று

சொல்லியிருப்பதாகவும், அந்த பணத்தை தன்னை வாங்கி வைக்கச் சொல்லியிருப்பதாகவும், அதனால் பணத்தை உடனே ரெடி பண்ணி தன்னிடம் தரும்படியும் சொன்னார். அதற்கு என்னிடம் அவ்வளவு பணம் இப்போது இல்லை, என் நண்பரிடம் கேட்டு நாளை வாங்கித்தருகிறேன் என்று நான் சொன்னதற்கு, கிராம உதவியாளர் தேவி என்னிடம் லேட் பண்ணினால் பிரச்சனை வெளியே தெரிந்துவிடும், அதனால் பாதி பணமாவது உடனே ரெடி பண்ணிக்கொடுங்க என்று வற்புறுத்தி கேட்டார். அதனால் நான் வேறு வழியில்லாமல் எனக்கு விருப்பமின்றி, கைவசம் இருந்த ரூ.7,500/- பணத்துடன், ATM-க்கு சென்று ரூ.12,500/-ஐ எடுத்துவந்து மொத்தம் ரூ.20,000/-ஐ சுமார் 12¼ மணியளவில் தேவியிடம் கொடுத்தேன். அப்போது அவர் ஒரு பெரிய தபால் கவரை எடுத்து வந்து அதில் அந்த பணத்தை உள்ளே வைக்கும்படி சொன்னார். அவர் சொன்னபடி பணம் ரூ.20,000/-ஐ அந்த கவருக்குள் வைத்ததும் அந்த கவரை இரண்டாக மடித்து எடுத்துக்கொண்டு மீதி பணம் ரூ.20,000/-ஐ சிக்கிரமே ரெடி பண்ணி கொடுத்தால் தான் இந்த விசயம் பிரச்சனை இல்லாமல் முடியும் என்று சொன்னார். நானும் சரியென்று சொல்லிவிட்டு வந்துவிட்டேன். பிறகு 02.01.2026-ஆம் தேதி நான் சொந்த வேலையாக வெளியூர் சென்றுவிட்டேன். அன்று பகல் சுமார் 12½ மணியளவில் கிராம உதவியாளர் தேவி அவரது செல்போன் எண். 8838163345-லிருந்து எனது செல்போன் எண்.9842779257-க்கு போன் செய்து மீதி பணம் ரூ.20,000/-த்தை ரெடி பண்ணிட்டீங்களா என்று கேட்டார் அதற்கு நான் சொந்த வேலையாக வெளியூரில் இருக்கிறேன், ஊருக்கு வந்து பணத்தை ரெடி பண்ணிவிட்டு போன் செய்கிறேன் என்று சொன்னேன். எனக்கு உடம்பு சரியில்லாததால் மூன்று நாட்களாக வீட்டிலேயே ஓய்வு எடுத்தேன். நேற்று மதியம் சுமார் 2 மணியளவில் எனது செல்போனை பார்த்துக் கொண்டிருந்த போது கிராம உதவியாளர் தேவியின் செல்போனிலிருந்து எனக்கு சனிக்கிழமை காலை சுமார் 11 மணியளவில் இரண்டு மிஸ்டு கால் வந்திருந்ததை பார்த்துவிட்டு அவருக்கு போன் செய்து பேசியபோது அவர் மீதிப்பணம் 20,000 ரூபாய் பற்றி என்னிடம் கேட்டார். அதற்கு நான் நாளை வந்து கொடுக்கிறேன் என்று சொல்லிவிட்டு போனை வைத்துவிட்டேன். அவர்களுக்கு மேலும் லஞ்சமாக ரூ.20,000/- கொடுக்க எனக்கு விருப்பமில்லை. அதனால் நான் நாமக்கல் லஞ்ச ஒழிப்புத்துறையில் இதுபற்றி புகார் கொடுக்கலாம் என்று முடிவு செய்தேன். எனவே என்னிடம் ஏற்கனவே லஞ்சமாக பணம் ரூ.20,000/- கேட்டு வாங்கிய புதுபுளியம்பட்டி VAO திரு.குணசேகரன்

மற்றும் கிராம உதவியாளர் திருமதி.தேவி ஆகியோரை இன்று 06.01.2026-ஆம் தேதி அவர்கள் கேட்ட மீதி லஞ்சப் பணம் ரூ.20,000/-த்துடன் நேரில் சந்திக்க தயாராக இருக்கிறேன். எனவே, அவர்கள் மீது தகுந்த நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக் கொள்கிறேன். இப்படிக்கு (Sd/-xxxx (K.Senthilkumar) 06-01-2026.

Sir,

I received the above computer typed complaint on 06.01.2026 at 07.25 hrs and the genuineness of the informant was verified through sources and found to be genuine and the integrity of the accused were also verified through sources and learnt to be not good. The motive and antecedents of the complainant with the accused have been checked carefully and found nothing adverse. Hence, I obtained oral concurrence from the DVAC, Chennai and I registered a case in Namakkal Vigilance and Anti-Corruption, Cr.No.01/AC/2026 u/s. 7(a) of the Prevention of Corruption (Amendment) Act, 2018 on 06.01.2026 at 08.10 hrs against the said accused Tr.Gunasekaran, VAO, Pudhupuliyampatty and Tmt.Devi, Village Assistant, Pudhupuliyampatty. Sd/-(xxxx) (S.Prabhu) 06.01.26. Inspector of Police, V&AC, Namakkal.

The original FIR along with original computer typed complaint of the informant Tr.K.Senthilkumar are submitted to the Hon'ble Court of the Principal District and Sessions Judge, Namakkal and remaining copies are sent to the officers concerned and I took up investigation..

06/01/26

(S. PRABHU)
Inspector of Police,
Vigilance and Anti-Corruption,
Namakkal.